பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 08 செவ்வாய்க்கிழமை 21.05.2024 கதிர் 195

# 3,500 குடும்பங்கள் மழையினால் பாதிப்பு

நிலவும்சீரற்றகாலநிலையால் 3,518 குடும்பங்களைச்சேர்ந்த 10,299 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகஅனர்த்தமுகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் - கிழக்கு நுவரகம், பலாத்த பகுதியில் பெய்தகடும்மழைகாரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் இருவர்காயமடைந்துள்ளனர்.

இதேவேளை இரத்தினபுரி மாவட்டத்தில்நிவிதிகல,கொடகவெலமற்றும்பலாங்கொடை ஆகிய பகுதிகளில் பலத்த காற்று வீசியமையால் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு விவகாரம்தான் மே 19 வவுனியாக் கூட்டத்தில் முதன்மையான பேசு பொருளாக இருந்தது. வழக்கை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதில் அங்கு ஒன்றுபட்ட கருத்துக் காணப்பட்டது. ஆனால், எப்படி முடிவுக்குக் கொண்டுவருவது என்பதைத்தான் முடிவு செய்யவேண்டியிருந்து. அதனை சிறீதரனின் முடிவுக்கே விட்டுவிட்டார்கள்.

வழக்கின்தொடக்கநிலையிலேயே வழக்காளியானபராவுடன்ஒருசமரசப் பேச்சு நடத்தப்பட்டது. அப்போது, ஜனவரி 21 மற்றும் 27 பொதுக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை அப்படியே, மாற்றம் ஏதுமின்றிச் செயற்படுத்துவதாகக் கட்சித் தலைமையினால் தனக்கு நம்பத்தகுந்த வழியில் உறுதிமொழி வழங்கப்பட்டால் வழக்கைத் தான் திரும்பப் பெறுவார் என்று பரா உறுதியளித்திருந்தார். ஆனால் கட்சித் தலைமையிடமிருந்து நேரடியான அத்தகைய ☞ 2

## இன்று துக்கதினம்

இன்றைய தினத்தை துக்க தினமாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்ட 09 பேர் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்ததை அடுத்து, உயிரிழந்தோரை நினைவு கூறும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி இன்று அனைத்து அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்

## கெஹலியவின் மறியல் நீடிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்க மாளிகாகந்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற மனித இம்யூனோகுளோ ☞ 2

## ஜூலையில் நாடாளுமன்றக் கலைப்பு என்பது உதயங்கவின் தனிக் கருத்து

### பொதுஜன பெரமுனவின் செயலர் தெரிவிப்பு

ஜூலை மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பது உதயங்கவின் தனிப்பட்ட கருத்து என்கிறார் பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் உரிய தினத்தில் நடத்தப்படும். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ☞ 9

## கிளிநொச்சியின் மக்கள் பிரதிநிதிகள் அரசுக்கு விலைபோய்விட்டார்கள்

### முன்னணியின் சுகாஸ் குற்றச்சாட்டு

கிளிநொச்சி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசுக்கு விலைபோயுள்ளமையால் கிளிநொச்சி மண் ஆக்கிரமிக்கப்படுகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி கனரட்னம் சுகாஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றையதினம் சந்திரன் பூங்காவில் நடைபெற்ற மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை அடுத்து செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

கிளிநொச்சியில் சந்திரன் பூங்கா இராணுவத்தினரால் ஆக்கிரமிப்புச்செய்யப்பட்டுள்ளது. இதனை மீட்டெடுப்பதற்காக நாம் நூற்றுக்கணக்கான பொதுமக்களைதிரட்டிபோராட்டம் செய்திருக்கின்றோம்.

கிளிநொச்சியில்இதுமட்டுமல்ல, கிளிநொச்சிமாவட்டத்தில்சூழலுக்கு பாதகம் ஏற்படும் வகையில் பொன்னாவெளியில் சீமெந்து ஆலை அமைக்கின்றார்கள். உருத்திரபுரேஸ்வரர் கோவிலை ஆக்கிரமிப்பதற்கு முயற்சிக்கின்றார்கள். தமிழ்ப் பாடசாலையை பெயர் மாற்றுகின்றார்கள். இப்போது பூங்காவையும்ஆக்கிரமிப்புச் ☞ 9

## காலநிலை அழிவுகளைத் தடுக்க நிதியளிக்கும் நாடுகள் பின்னடிப்பு

### உலக நீர் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி குற்றச்சாட்டு

உக்ரேனில்ஏற்படும் உயிர் அழிவுகளுக்கு நிதியளிக்க தயாராக இருக்கும், உலகளாவிய வட துருவ நாடுகள் காலநிலையால் ஏற்படும் அழிவுகளை தடுக்கும் பணிகளுக்கு நிதியளிக்க பின்வாங்குவதாக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இந்தோனேசியா, பாலி சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுவரும் 10ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்விலேயே நேற்று ஜனாதிபதி இதனை வலியுறுத்தினார்.

உலகளாவிய வரி ஏய்ப்புச் சொத்துக்களின் வருடாந்த இலாபம் 1.4 டிரில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டிருப்பதால், அந்த இலாபத்தின் மீது, காலநிலை மாற்ற நிதியத்திற்காக 10% வரி விதிப்பதற்கான ☞ 8

## ஈரான் அதிபர் மறைவுக்கு ரணில் இரங்கல்

ஈரான் நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிட்டுள்ள இரங்கலில், ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளிவிவகாரஅமைச்சர் அமீர்அப்துல்லாஹியன் மற்றும் பல மூத்த அதிகாரிகளின் துயர மரணத்தால் இலங்கை ஆழ்ந்த அதிர்ச்சியும்கவலையும் அடைந்துள்ளது.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அரசுக்கும், ஈரான் மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் மறைந்த ஈரான் ஜனாதிபதி ரைசியின் குடும்பத்தினருடனும் ஈரான் மக்களுடனும், உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ☞ 2

## பொருளாதாரம் தொடர்பான 2 சட்டமூலங்கள் மே 22இல்

### நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

பொருளாதார முக்கியத்துவம்வாய்ந்த இரு சட்டமூலங்கள் மே 22 நாடாளுமன்றத்தில் சம்பிக்கப்படவுள்ளன என்றுபதில்நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு சட்டமூலங்களை மே மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்க ஆளும் தரப்பு திட்டமிட்டுள்ளது. இந்த சட்டமூலங்களில்ஒன்று, மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதைத் தடுப்பது ☞ 9

## 15 வருடங்கள் மிக நீண்ட காலம் மன்னிக்கவே முடியாக் குற்றம்

### காணாமலாக்கப்பட்டோர் நிலை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை செயலர் கருத்து

காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்து 15 வருடங்களாகியும் பதில் இல்லை. இது மிக நீண்டகாலம். இது மன்னிக்க முடியாத குற்றம்-. இவர்கள் குறித்து ஆளும் தரப்புப் பதிலளிக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று அவர்செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் ததாவது: ☞ 9

## இந்தோனேசிய ஜனாதிபதியை சந்தித்து ரணில் நேற்றுப் பேச்சு

இந்தோனேசிய தலைநகர் பாலியில் நடைபெற்று வரும் பத்தாவது உலக நீர் மாநாட்டுக்குஇணையாக ஜனாதிபதிரணில்விக்ரம சிங்கவிற்கும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவிற்கும் இடையிலான உத்தியோகபூர்வசந்திப்பு இடம்பெற்றது.

இந்தோனேசிய ஜனாதிபதி இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சிநேகபூர்வமாக வரவேற்றதுடன், இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ உரையாடலின்பின்னர்,இருதரப்பு கலந்துரையாடல்களும் ஆரம்பிக்கப் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டை முடக்கப்போகும் தேர்தலா அல்லது வலுப்படுத்தும் தேர்தலா?

## எது தேவை என்கிறார் ஐ.தே.க. தவிசாளர் வஜிர

நாட்டைச்செயலிழக்கச்செய்யும்தேர்தலா இல்லை நாட்டை வலுப்படுத்தும் தேர்தலா தேவை என்பதே எனது கேள்வியாகவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின்தவிசாளரும்,நாடாளுமன்றஉறுப்பினருமான வஜிர அபேவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

முதலில்ஜனாதிபதிதேர்தலாஅல்லதுநாடாளுமன்றத் தேர்தலா நடைபெறும் என்பது தொடர்பில் கருத்து வெளியிடும்போதேஅவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு எழுவதற்கும், பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கும் அரசியல் ஸ்திரநிலைமை மிகவும் முக்கியமானதாகும்.

ஆகவே நாட்டுக்கு ஜனாதிபதி ஒருவரே அவசியமாக தேவைப்படுகின்றார். தற்போதைய ஜனாதிபதி 50 வருடங்கள் அனுபவமுள்ள தலைவராக உள்ளார். அவர் மீண்டும் இந்த நதாட்டை பொறுப்பேற்பதன் ஊடாகவே நாட்டின் எதிர்காலம் உறுதி செய்யப்படும்.

அவர் இரண்டு வருடங்களில் வீழ்ச்சி அடைந்த நாட்டை மீட்டு வருகின்றார். அவரது செயற்பாடுகள் முழுமையடையவில்லை. ஆகவே அவர் நாட்டை முழுமையாக மீட்டு எடுப்பதற்கான சந்தர்ப்பத்தினை நாம் வழங்க வேண்டும். அவரை தேசிய தலைவரரக ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

## இனி இது .....

உறுதிமொழிஅவருக்குக்கிடைக்காத நிலையில், பேச்சுக்கு வந்த அடுத்த நிலைத் தலைவர்களை நம்பி வழக்கை முடிவுறுத்த அவர் விரும்பியிருக்கவில்லை.

இந்த நிலையில் மே 19 கூட்டத்தில் சிறீதரன் முன்பு இரு தெரிவுகள் வைக்கப்பட்டன. ஒன்று, வழக்காளியுடன்நடத்தப்பட்டசமரசப் பேச்சில் அவர் கேட்டதை ஏற்று நடைமுறைப்படுத்தஒப்புக்கொண்டு வழக்கை முடிவுறுத்துவது அல்லது நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் வழக்காளி கேட்டிருக்கும் நிவாரணங்களைவழங்கி, அதாவது யாப்புப்படி கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை முறையாக மீண்டும் கூட்டி அனைத்துப் பதவிகளுக்குமான தெரிவுகளை மீண்டும்நடத்துவது. இந்தஇரண்டில் சிறீதரன் இரண்டாவதைத்தான் தனது தெரிவாகக் கொண்டார்.

அதன்படி கட்சி யாப்பின் அடிப்படையில் மீண்டும் பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டி கட்சிப் பதவிகள் அனைத்தையும் மீளத் தெரிவுசெய்வோம் என்கிற உறுதிமொழியை நீதிமன்றத்திற்கு வழங்கி வழக்கை முடிவுறுத்துவது என்பதே சிறீதரனின் தெரிவாக அமைந்தது. அவரது முடிவை அடுத்து இது சம்பந்தமாக வழக்காளியின் சட்டத்தரணியுடன் பேசிவழக்கைஒருஇணக்கத்துடன் முடிவுக்குக் கொண்டு வருமாறு சுமந்திரனிடம் மத்திய குழு கேட்டது. சுதாகரித்துக்கொண்ட சுமந்திரன்தான்மட்டும்பேசமுடியாது வழக்கின் பிரதிவாதிகள் சார்பில் முற்படும் சட்டத்தரணிகள் அனைவருமே பேசவேண்டும் என்று பொறுப்பை அனைவர் தலையிலும் சுமத்திவிட்டார்.

இருப்பினும் கூட்டத்தின் முடிவில் சுமந்திரனுக்கு அருகே வந்த சட்டத்தரணி தவராசா (இவர்தான்சிறீதரனின்சட்டத்தரணி) வழக்காளியின் சட்டத்தரணியுடன் நீங்கள்பேசிமுடிவுசெய்யுங்கள்சுமா, பிறகு நாங்களும் பேசலாம் என்று மெல்லச் சொல்லிவிட்டுப் போனார் என்று பார்த்துக்கொண்டிருந்தவர் சொன்னார். ஆனால், இப்போதெல்லாம் சுமந்திரன் உசாராகிவிட்டார் என்றும் கட்சிக்காரர்களை நம்பி, அவர்களுக்காகக் காரியமாற்றிவிட்டு பழியைத் தன் மீது சுமந்து திரிய அவர் தயாராக இல்லை, எல்லாவற்றையும் தன்னையேசெய்யச்சொல்லிவிட்டு கடைசியில் தன்னையே துரோகி என்றுவாக்குப்போடக்கூடியவர்கள் இவர்கள்என்பதுஅவருக்குஇப்போது தெளிவாகிவிட்டது என்பது அவரது நடத்தையில் தெரிகின்றது என்று அவரே சொன்னார்.

ஆக மொத்தத்தில் சிறீதரன் இப்போதைக்குக் கட்சியின் தலைவராகப்போவதில்லைஎன்பது தெளிவு. யாப்பின் அடிப்படையில் இனிக்கட்சியின்தொகுதிக்கிளைகள் அனைத்தையும் புனரமைத்து பொதுக் குழுவைக் கூட்டுவதற்கு இன்னும் பல மாதங்கள் செல்லும். அதற்கிடையில்ஜனாதிபதித்தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்று பல முக்கிய அரசியல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதற்கிடையில் கட்சிக் கிளைகளைப் புனரமைத்து பொதுக்குழுக்கூட்டத்தைநடத்துவது என்பது இலகுவான விடயமாக இருக்கப் போவதில்லை. அதுவும் கட்சித் தலைவராக மாவை சேனாதிராசாவைவைத்துக்கொண்டு இந்தக் காரியங்களை விரைவாக முடிக்கமுடியும்என்றுஎதிர்பார்க்கவும் முடியாது.

கிடைத்த அதிகாரத்தைக் கோட்டைவிட்டுவிட்டு, தன்னால் மீண்டும் அதிகாரத்தைப் பிடிக்க முடியும்என்கிறசிறீதரனின்எண்ணம் வீண் நம்பிக்கையாகிவிடாமல் இருப்பதை அவர்தான் இனித் தனியே சுமக்க வேண்டியிருக்கும். அதற்கானஅறிகுறிகளைவவுனியாக் கூட்டத்திலேயே காண முடிந்தது. கூட்டம் முடிந்ததும் கட்சியின் பேச்சாளர் என்ற வகையில் அது தொடர்பானஅறிவிப்புக்களைபத்திரிகையாளர்களிடத்தில்தெரிவிக்காமல் சுமந்திரன் வெளியேறிவிட்டார். சுமந்திரனை ஒரு ஜென்டில்மேன் என்றுநினைத்தேன் ஆனால் அவர் அப்படி நடந்துகொள்ளவில்லை என்றெல்லாம் சிறீதரன் அறிக்கைவிட்ட பின்னர், அதாவது தனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகச் சுமந்திரன் நடந்துகொள்ளவில்லை என்று பகிரங்கமாகக்குற்றஞ்சாட்டியபின்னர் கட்சியின் நம்பிக்கைக்குரியவராக எப்படி கட்சி விடயங்களை ஊடகங்களுக்குத் தெரிவிக்க முடியும் என்று சுமந்திரன்கருதினாரோஎன்னவோ, அவர் வெளியேறிவிட்டார்.

இதுபோல கட்சிக்குள் தாங்களே ஏற்றபடுத்தி வளர்த்துவிட்ட பிளவுகளுக்கு மத்தியில் கட்சியை மீளமைத்து பொதுக் குழுக் கூட்டத்தை மீண்டும் கூட்டுவது அவ்வளவுஇலகுவானதல்லஎன்பதே கட்சிக்குள்ளும் பலரின் கருத்து.

இடிமின்னல்

(idiminnal@gmail.com)

## 3,500....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரங்கள் முறிந்து வீழ்ந்ததில், 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் நிலவும் கடும் மழை காரணமாக களுத்துறை மாவட்டம் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது

இதேநேரம், நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி அத்தனுகலு ஓயா, களுகங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்காரணமாக குறித்த நீர்நிலைகளை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள்வெள்ளம்குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் பரவலாக பெய்துவரும் கடும் மழை காரணமாக வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது. வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அவசரமாக விடுத்துள்ள புதிய அறிவித்தலிலேயே, இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் இன்றும் 150 மில்லிமீற்றருக்கும் அதிகளவான கனமழைபெய்யக்கூடுமென, அந்த அறிவித்தலில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்சப்ரகமுவமாகாணம், காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சில இடங்களில் நூறு மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## ஈரான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈரான் நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவை கேள்வியுற்று இலங்கையில் உள்ள ஈரானிய தூதரகத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு ஈரானிய தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் சந்தித்து இரங்கலை தெரிவித்ததோடு, இரங்கல் புத்தகத்தில் குறிப்பொன்றையும் பதிவிட்டுள்ளார்.

மஹிந்தராஜபக்ஷவெளியிட்டுள்ள இரங்கலில், ஹெலிக்கொப்டர் கோர விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம்ரைசிமற்றும் அவருடன் சென்ற பல மூத்த அதிகாரிகள் உயிரிழந்தமைஆழ்ந்தஅதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி ரைசி இலங்கையின் உண்மையான நண்பராக இருந்தார். ஈரான் மக்கள் மீது அவர் கொண்ட தலைமைத்துவமும்அர்ப்பணிப்பும் என்றும் நினைவுகூரப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

## கெஹலியவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலின் மருந்து இறக்குமதி சம்பவம் தொடர்பான வழக்கிலேயே முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 சந்தேக நபர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# சந்தேகநபராக பெயரிடப்பட்டார் டயானா கமகே

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு பொய்யானதகவல்களைசமர்ப்பித்து கடவுச்சீட்டுப்பெற்றமைதொடர்பான வழக்கில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை சந்தேகநபராக பெயரிட்டு கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டமை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவை சந்தேக நபராகக் குறிப்பிட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகேவிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளது.

இதன்படி, தண்டனைச் சட்டக் கோவையின் பிரகாரம் செயற்பட்டு நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு காவல்துறையினருக்கு நீதிவான் உத்தர விட்டுள்ளார். எவ்வாறாயினும், கொழும்பில் உள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் இல்லத்துக்கு தமது அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில் சென்றிருந்த போதிலும் அவர் குறித்த வீட்டில் இருக்கவில்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

இதேவேளை, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தனது கடவுச்சீட்டை குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார். நீதிமன்ற உத்தரவுக்கமையவே அவர், பயன்பாட்டிலுள்ள தனது கடவுச்சீட்டை ஒப்படைத்துள்ளார்.

டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்து உயர் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது. டயனா கமகே இலங்கைப் பிரஜை இல்லையென்பதால், அவர் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாதென உயர் நீதிமன்றம்தீர்ப்புவழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும்இடையிலானவரலாற்று உறவுகளை மேலும் பலப்படுத்த இரு நாட்டு தலைவர்களும் உறுதி எடுத்துக்கொண்டதோடு, பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இரு நாட்டுத் தலைவர்களும் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்துக் கவனம் செலுத்தியதோடு, உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பெண்டுக் மாநாட்டில் பங்குபற்றியதிலிருந்து காணப்படும் இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகளை நினைவுகூர்ந்து தனது உரையை ஆரம்பித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இவ்வாறானமாநாடுகளின்முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் இந்தோனேசிய ஜனாதிபதி விடோடோவின் தலைமைத்துவத்திற்கு ஜனாதிபதி நன்றி கூறினார்.

உலக நீர் உச்சி மாநாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நீர் வள முகாமைத்துவத்தில் உலக நாடுகள் எதிர்கொள்ளும் பொதுவான நிதிச் சவால்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் உலகளாவிய கூட்டு நிதியத்தில் பங்கேற்க இலங்கை ஆர்வமாக உள்ளதெனவும் சுட்டிக்காட்டினார்.

கூட்டுச் செயலகம் ஒன்றை ஆரம்பித்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தோனேசியாவிற்கு பாராட்டுக்களை தெரிவித்ததுடன், இலங்கைக்கான அதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளைப் பலப்படுத்த 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வர்த்தக ஒப்பந்தத்தில் கைசாத்திட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இந்தோனேசிய மருந்து நிறுவனங்கள் இலங்கையின் மருந்து, தடுப்பூசிச் சந்தையில் நுழைவதற்கான ஆர்வத்தையும் எடுத்துக்கூறிய இந்தோனேசிய ஜனாதிபதி, இந்தோனேசிய ஃபாம் எண்ணெய் மற்றும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குமாறு ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிடம் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய சக்தித் திட்டம் உட்பட புதுப்பிக்கத்தக்கஎரிசக்தித்துறையில் இந்தோனேசியா அடைந்துள்ள முன்னேற்றத்தை எடுத்துரைத்த விடோடோ, நிலையான நீர் முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நீர் தொடர்பிலானஇராஜதந்திரம்மற்றும் அரசியல் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

அத்துடன், இந்து சமுத்திரப் பிராந்திய எல்லை நாடுகளின் ஒன்றியத்திற்கு இலங்கை தலைமைத்துவம் வகிப்பதை தாம் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த இந்தோனேசியஜனாதிபதி, அதற்குத் தனது பங்களிப்பை வழங்க எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் இலங்கை மேற்கொண்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் தாய்லாந்து, பங்களாதேஷ் மற்றும் மலேசியாவுடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் குறித்து எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்குள் இந்தோனேசியாவுடன் வர்த்தக உடன்படிக்கைக்குள்பிரவேசிப்பதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

பிராந்திய விரிவான பொருளாதாரக் கூட்டாண்மையில் இணைவதன் பயன்கள் குறித்துக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதில் இலங்கை இணைத்துக் கொள்ளப்படுவது ஏனைய தெற்காசிய நாடுகளையும் அதில்இணைவதற்குஊக்கமளிக்கும் என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ளஇறக்குமதிக்கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்தும் குறிப்பிட்டுள்ள இலங்கை ஜனாதிபதி, இலங்கை சந்தைக்கு வரும் இந்தோனேசிய மருந்துகள் தொடர்பில் இலங்கை சுகாதார அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும் உறுதியளித்தார்.

இந்த இருதரப்பு கலந்துரையாடலின்போது இந்து சமுத்திர பிராந்திய பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்து

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசுக் கட்சி ஊடக சந்திப்பை புறக்கணித்தார் சுமந்திரன் எம்.பி.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பை கட்சியின் பேச்சாளாரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் புறக்கணித்து வெளியேறியிருந்தார்.

வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பையே அவர் புறக்கணித்திருந்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில்காலை10.30மணியில்இருந்து மாலை 7 மணி வரை நடைபெற்றது. கூட்ட முடிவில் தீர்மானங்களை அறிவிப்பதற்காக ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்திருந்த நிலையில் கூட்டம் நிறைவடையும் வரை நீண்டநேரமாகஊடகவியலாளர்கள்வெளியில் காத்து நின்றனர்.

கூட்டம் முடிவடைந்ததும் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், தமிழரசுக் கட்சியின் பேச்சாளருமான ஏம்.ஏ.சுமந்திரன், முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் ஆர்னோல்ட், பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்ட சிலர் வெளியில் வந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் பேச்சாளர் தீர்மானங்களை தராமல் செல்கிறீர்கள் எனக் கேட்ட போது, ஏம்.சுமந்திரன் அவர்கள்உள்ளேஇருக்கிறார்கள். அவர்களிடம் போய் கேளுங்கள் எனக் கூறியிருந்தார்.

ஊடகவியலாளர்கள் மண்டபத்திற்குள் சென்றதும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பேச்சாளர் எங்கே என வினவிய போது, ஊடகவியலாளர்கள் அவர் வெளியில் செல்கிறார் எனக் கூற அங்கிருந்தவர்கள் அவரை அழைத்திருந்தார்கள். ஆனாலும் அவர் சமுகமளிக்காது சென்றுவிட்டார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அவர்களை கருத்து தெரிவிக்குமாறு கூற அவர் கூட்ட தீர்மானங்களை ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். சட்ட விடயங்களை கே.வி.தவராசா தெரிவித்திருந்தார்.

இதேவேளை, கட்சியின் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் அவர்களையும் ஊடக மாநாட்டில் அமருமாறு கேட்கப்பட்ட போதும் ஊடக மாநாட்டில் அமராது நின்ற நிலையில் அதனை அவதானத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(05 - 100)

## தமிழ் அரசுக் கட்சியின் வழக்குத் தொடர்பில் சுமுகமான முடிவுகள் எட்டப்பட வேண்டும்

### ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவிப்பு



தமிழரசுக் கட்சி தொடர்பில் சுமுகமான முடிவுகள் எட்டப்படவேண்டும் என்ற அடிப்படையில் எமது செயற்பாடுகள் அமைந்துள்ளன என சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

திருகோணமலை நீதிமன்றில் உள்ள வழக்கை முதல்திகதியிலேயே முடிவிற்கு கொண்டுவரவேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் செயற்பட்டோம். இது ஒரு பொதுநல வழக்கு. தற்போது நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. இறுதியாக நாம் ஒரு தீர்மானத்திற்கு வந்துள்ளோம்.

வழக்காளியின் சட்டத்தரணிகளுடனும், வழக்காளியுடனும் பேசி இந்த விடயத்தை இணக்கப்பாட்டிற்கு கொண்டு வந்து வழக்கை முடிவுறுத்துவதற்கான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மத்தியகுழு உறுப்பினர்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் மீண்டும் பொதுக்குழுவை கூடி சுமுகமாக முடிவு எட்டப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது செயற்பாடுகள் அமைந்தன என்று தெரிவித்தார்.இதேவேளை, குறித்த விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரனும், கே.தவராசாவும் மத்தியகுழுவால் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(05 - 100)

## றிஸ்லி முஸ்தபாவின் சேவைக்கு கௌரவம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை தொகுதி முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் புதல்வர்றிஸ்லிமுஸ்தபாகல்முனை பிராந்தியத்திலும், பிராந்தியத்திற்கு வெளியிலும் மேற்கொண்டு வரும் சேவைகளை பாராட்டி சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம் நேரடியாகச் சென்று கௌரவித்த நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருதில் நடைபெற்றது.

சிலோன்ஜேர்னலிஸ்ட்போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த றிஸ்லி முஸ்தபா, ஊடகவியலாளர்கள் என்னைத் தேடி வந்து கௌரவிப்பு



வழங்கியமை எனக்கு மகிழ்ச்சியை தருகிறது. ஊடகத்துறையையும் ஊடகவியலாளரையும் நாம் கௌரவத்தோடு மதிக்கின்றோம். மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பத்திலும் அனர்த்த நிலைமையிலும் அசாதாரண சூழலிலும் என ஊடகவியலாளர்கள் பல்வேறு சேவைகளை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஊடகவியலாளர்களின் சேவை மெச்சத்தக்க ஒன்றாகும். எதிர்காலத்தில் எமது பிராந்திய ஊடகத்துறையில் நவீன தொழில்நுட்ப வசதியை உருவாக்க வேண்டும். இதன் மூலம் பிராந்திய ஊடகத்துறையும் ஊடகவியலாளர்களையும் முன் கொண்டு செல்ல வேண்டும் என்று தெரிவித்தார்.

முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் முஸ்தபாவின் மரணத்திற்கு பின்னர் அவருடைய புதல்வர் றிஸ்லி முஸ்தபா அரசியல் கட்சியுடன் இணைந்து கல்முனை பிராந்தியத்தில் பல அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டார். கல்வி, விளையாட்டு, பொருளாதாரம், கலை - கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் வறுமையான மக்களுக்கு பல்வேறு பங்களிப்புக்களை தொடர்ச்சியாக வழங்கி வருகிறார். இவரது இந்த சமூக சேவையை ஊக்குவிக்கும் பொருட்டும், எதிர்காலத்தில் இன, மத, மொழிகளுக்கு அப்பால் சமூக நல்லிணக்கத்துடன் சேவையாற்றுவதற்கும், இளைஞர் சமூகத்தை வலுவுள்ள சமூகமாக மாற்றவும் றிஸ்லி முஸ்தபா போன்ற இளம் தலைவர்கள் பாராட்டப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிலோன் ஜேனலிஸ்ட் போராம் றிஸ்லி முஸ்தபாவிற்கு நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இதில், போரத்தின் உயர் பீட உறுப்பினர்கள், நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

## புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற அம்பாறைக் குழுவினர் மக்கா பயணம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக அம்பாறை மாவட்டத்தில் இருந்து முதலாவது ஹஜ் குழு நேற்று (திங்கட்கிழமை) சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலிலிருந்து புறப்பட்டது.





மௌலவிஎம்.எஸ்.எம்.சுஹ்ருதீன்தலைமையிலான முதலாவது ஹஜ் குழுவில் ஆண்கள், பெண்கள் என இம்முறை 68 பேர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா செல்கின்றனர்.

இதில் சாய்ந்தமருது பிரதேசத்தில் இருந்து 25 பேர் உள்ளடங்குவர். இக்குழுவில் முஹம்மத் மௌலவியும் வழிகாட்டியாகச் செல்கிறார்.

நிகழ்வில் மௌலவி சபானிஸ் துஆப் பிரார்த்தனை மேற்கொண்டார்.

இக்குழுசெவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு புனித மக்கா பயணமாகினார்.

மேற்படி வழியனுப்பும் நிகழ்வில், ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் ஹாஜிமார்கள், ஹாஜியானிகள் மற்றும்அவர்களதுஉறவினர்கள்,



பள்ளிவாசல் நிர்வாகிகள், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினர், மறைக்காயர்மார்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பொறுப்பு ஐ.நாவுக்கும் உண்டு

குற்றங்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். ஆயுத மோதல்கள் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், ஆரம்பகட்ட வலிந்து காணாமலாக்கப்படுதல்கள் இடம்பெற்று பலதசாப்தங்கள் கடந்துள்ள நிலையிலும், இலங்கை அதிகாரிகள் உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இன்றுவரை தவறியுள்ளனர்.

இப்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது. இலங்கையின் ஆயுத மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், பன்னாட்டுச் சட்டமீறல்கள் தொடர்பில் ஆதாரங்களை அந்தப் பணியகம் திரட்டிவரும் நிலையில், பொறுப்புக்கூறல் தொடர்பான அதன் அறிக்கை வெளிவந்துள்ளது.

இலங்கையில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களை ஒருபோதும் மறக்ககூடாது என்பதனை இந்த அறிக்கை மீண்டும் நினைவுபடுத்துகின்றது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் அவர்கள் குறித்து அக்கறையுள்ளவர்களும் நீண்டகாலமாக காத்திருக்கின்றனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவருக்கும் பதில்சொல்லவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது, இந்தக் குற்றங்களை முழுமையாக விசாரிக்கவேண்டியது அவசியமாகும். இந்தக் குற்றங்கள் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் அன்புக்குரியவர்களை மாத்திரம் வேதனைக்குள்ளாக்கவில்லை ஒட்டு மொத்த சமூகங்களையும் இலங்கை சமூகத்தை முழுமையாகவும் வேதனைப்படுத்துகின்றது என்றெல்லாம் அறிக்கை மேலும் விவரித்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வந்து மே 18 15 வருடங்களாகியுள்ளது. 970கள் முதல் 2009 வரை இலங்கையில் பரந்துபட்ட அளவிலான வலிந்து காணமலாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன இதில் இலங்கையின் பாதுகாப்பு படையினரும் துணை இராணுவகுழுக்களும் ஈடுபட்டன என்று அறிக்கை நேரடியாகவே குற்றஞ்சாட்டுகின்றது.

வலிந்து காணாமலாக்கும் சிறிய எண்ணிக்கையிலான நடவடிக்கைகளில் அரசை எதிர்த்த ஆயுத குழுக்களும் ஈடுபட்டன என்றும் அறிக்கை குறிப்பிடுகின்றது. அதாவது விடுதலைப் புலிகளைவிட அரச தரப்பினராலேயே இத்தகைய சட்டமீறல்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன என்று அறிக்கை குறிப்பிடுகின்றது. அதனை மறுவளத்தில் விளக்கினால் அரச பயங்கரவாதமே தமிழர்கள் மீது மிக மோசமாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றது என்பதை ஐ.நா. போன்ற பொது அமைப்பு ஒன்று இப்போது வெளிப்படையாக ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் நம்பிக்கையை வெல்லவில்லை. மாறாக அதனுடைய செயற்பாடுகள் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளன என்றும் அந்த அறிக்கையில் காண்பபடுகின்றது. அதன் மூலம் இந்த அலுவலகம் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்கிற பாதிக்கப்பட்டவர்களின் குற்றச்சாட்டு ஐ.நாவை எட்டியுள்ளதும் கவனிக்கப்படவேண்டியது.


அறிக்கை முக்கிமான விடயங்களைக் குறிப்பிட்டாலும் இந்த 15 வருடங்களில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காமல் போனதற்கும் பொறுப்புக்கூறல் நிகழாமல் போனதற்கும் இலங்கை அரசை மட்டும் குற்றஞ்சாட்டமுடியாது ஐ.நா. போன்ற பெரு அமைப்புக்களும் உலக நாடுகளும் கூட அதற்குப் பொறுப்பேற்றாக வேண்டும். அறிக்கைகள் ஊடாக இலங்கையைக் குற்றஞ்சாட்டிவிட்டு தமது பொறுப்புக்களில் இருந்த பன்னாட்டுச் சமூகம் விலகியிருந்துவிட முடியாது.

அறிக்கைகளை விடுப்பதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு அவை எடுத்துச் செல்லப்படவேண்டியது அவசியம்.

# சினிமா வெறும் பொழுதுபோக்கா?







சினிமா ஒரு பொழுதுபோக்கு அல்லது வெறும் பொழுதுபோக்கு என்பதில் எனக்கு எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை. மதுக்கூடத்தில் நண்பனோடு அரட்டை அடித்தாலும் 3 மணி நேரம் பொழுது போகத்தான் போகிறது. சினிமா அந்த வெட்டிப் பொழுதை போக்கும் வேலையை செய்யவில்லை. மாறாக சினிமா என்ன செய்கிறது..?

அனிச்சை வாழ்க்கை அலுப்புகள் நிறைந்தது. மனிதர்கள் நிறைந்த வாழ்க்கை நதின்னளவிலேயே ஆதிக்கம், பாரபட்சம், அநீதிகள் நிறைந்தது. சரி தவறுகளைத் தாண்டி தகவமைப்பின் வழியாக அதுவாகவே மனித சமூகம் பரிணமித்திருக்கிறது.

சினிமாக் கலையின் பங்களிப்பு: இதில் முடிந்த வரை ஒரு சமநிலையை அடைவதற்கு அக நிலைகளில் ஆன்மிகமும், புற நிலைகளில் அரசியல் சித்தாந்தங்களும் முயல்கின்றன. சமூகத்தின் இந்த ஓட்டத்தில் கலையின் குறிப்பாக சினிமாக் கலையின் பங்களிப்பு என்ன?

கருத்துகளாக கூறி பிரச்சாரம் செய்வது என்றால் சினிமா எப்போதோ செத்து அங்கு புல் முளைத்திருக்கும். சினிமாவின் வேலை அதுவல்ல. மாறாக, சினிமா தம் அனுபவ உருவாக்கத்தின் மூலமாக நம் சாதாரண பொழுதுகளை அசாதாரண பொழுதுகளாக மாற்றுகிறது. வாழ்க்கையை 'போலச் செய்து'... நாம் பழகிய மனிதர்களை, பழகிய மனதை, பழகிய உணர்ச்சிகளை திரையில் மீட்டுகிறது. ஆனால், புனைவு செய்த கதையாடல் மூலமாக 'போலச் செய்கிறது'. 60 வருட வாழ்க்கையில் பெரும்பாலானவர்களுக்கு சில அற்புதமான தருணங்களே நிகழ்ந்திருக்கும். ஆனால் 2.30 மணி நேரம் ஓடும் ஒரே ஒரு சினிமா அதை விட அதிகமாக அற்புதமான தருணங்களைத் திரையில் நிகழ்த்துகிறது.

நண்பனுக்காக உறுதியாக நின்ற அனுபவங்கள் நம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் மீண்டு வர முடியாத குழியில் விழுந்த நண்பனை உறுதியாக நின்று மீட்டு, அந்த நட்பின் உணர்ச்சிகளை பல மடங்கு அதிகமாக மலரச் செய்து கொண்டாட வைத்தது 'மஞ்சுமெல் பாய்ஸ்' என்ற சினிமா.

தாய் தன் பிள்ளையிடம் குழந்தையாக மாறி விடும் அனுபவம் சில மனிதர்களுக்கு வாய்த்திருக்கலாம். ஆனால், மனநிலை சற்று பிறழ்ந்த மகன், கடுங்கோபத்துடன் தன் தாயை தேடிவந்து, அங்கு அவள் தன்னை விடவும் மனம் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து, குழந்தை போல அவளை ஏந்திச் செல்லும் அற்புதமான புனைவுத் தருணத்தின் வழியாக தாய்ப்பாச உணர்ச்சியை அதன் வேர் வரை தொட்டு நம்மை நெகிழச் செய்தது 'நந்தலாலா' என்ற சினிமா.

தனது உயிரானதத்துப் பிள்ளையை, மனநிலை பாதிக்கப்பட்ட அவளது சொந்தத் தாயிடம் விட்டு, வலியோடு திரும்பி 'தாய், பிள்ளை இருவருக்கும் தாயான' ஒரு பெண்ணின் மனம் வழியே அற்புதமான மானுட தரிசனத்தை வழங்கியது 'என் பொம்மு குட்டி அம்மாவுக்கு' என்ற சினிமா.

மகனை கரித்துக் கொட்டியே பழக்கப்பட்ட தந்தை. ஒரு சந்தர்ப்பத்தில் கோழிப் பண்ணையில் உயரதிகாரியாக கம்பீரமாக நிற்கும் மகனை பார்க்க நேர்கிறது. 'புள்ள வாழ்க்கைல ஜெயிச்சுட்டான்' என்பதில், தன்னையறியாமல் நெகிழ்ந்து நடந்து செல்லும் தருணம் வழியே, ஒரு முரட்டுத் தந்தையின் அகத்தை குறுக்கு வெட்டு தரிசனமாக நம்முன் வைத்தது 'எம் மகன்' என்ற சினிமா.

காதலின் தவிப்புகளை சந்திக்காத மனிதனே பூமியில் கிடையாது. தாக்குதலால் மூளை பாதித்து மனநல காப்பகத்தில் இருக்கும் காதலனை காண வருகிறாள் காதலி. சங்கிலியால் பிணைக்கப்பட்டு கண்மூடிப் படுத்திருக்கும் அவன் குணமடைந்தது தெரியாமல் பார்த்து விட்டு திரும்பிச் செல்கிறாள். சில வினாடிகள் கழித்து அவள் வந்ததை உணரும் காதலன், பரிதவிப்போடு அவளை சத்தமாக அழைக்கிறான், அவளுக்கு கேட்கவில்லை. பைத்தியக்காரனின் அலறலாக சுற்றியிருப்போர் பார்த்துக் கடக்கிறார்கள். கண்ணீரோடு மீண்டும் படுத்துக் கொள்கிறான்.

காதலின் தவிப்புணர்ச்சி எல்லோரும் அனுபவித்தது. ஆனால், அசாதாரணமான ஒரு புனைவுத் தருணம் வழியாக காதல் தவிப்பை அதன் முழு வெப்பத்துடன் கடத்தியது 'சேது' படத்தின் இக்காட்சி.

காதலின் மன நடுக்கத்தை, காதலி பந்தை பிடிக்க ஓடும் சாதாரண தருணத்தை நிலைநிறுத்தி, 'இது என்ன மாற்றம் இறைவனின் தோற்றம்' என இசையின் துணையோடு கடத்தியது '7ஜி ரெயின்போ காலனி' படத்தின் ஒரு காட்சி.

தந்தையின் இயலாமையை அனுபவித் திருப்போம். ஆனால் தந்தை சிறைக் கம்பிகளுக்கு அந்தப் பக்கம் நிற்கையில், மகள் பூப்பெய்தியவளாக திடீரென அவர் முன் தோன்றி, ஆசீர்வாதம் வாங்க சுவற்றின் முன்பு மரியாதை செலுத்தும் தருணத்தின் வழியே, வாழ்வின் பகடைக்காய்கள் ஒரு சாமான்ய மனிதனை வேதனையின் எந்த எல்லையில் நிற்க வைக்கிறது என்ற அவல தரிசனத்தை கலை அழகியலோடு வழங்கியது 'மகாநதி' படத்தின் இக்காட்சி.

அக உலகை அழகாக்கும் சினிமா: இப்படி அசாதாரண புனைவு மற்றும் அபுனைவின் விதவிதமான கதையாடல்கள் வழியே நெகிழ வைக்கும், மகிழ வைக்கும், பரபரக்க வைக்கும், மயிர்க்கூச்செரிய வைக்கும் 'போலச் செய்தல்களின்' மூலம் நம் ஆதார உணர்ச்சிகளை முழுவதும் மீட்டி, சலிப்பான, வறட்சியான இத்தினசரி வாழ்க்கையை புத்துயிர் பெற வைக்கிறது சினிமா. மனதின் தினசரி மற்றும் நீண்டகால கசடுகளையெல்லாம் புனைவு கதையாடல் வழியே வழிந்தோடச் செய்கிறது. நம்மையறியாமல் ஆழ் மனதோடு உரையாடி நம்மைப் பண்படுத்துகிறது. நம் ரசனைகள் வழியே நம் அக உலகை அழகாக்குகிறது. நுண்ணுணர்வுகளைத் தூண்டி உள்ளுணர்வை கூர்மையாக்குகிறது.

'ஏய் அந்த படத்துல இப்படி', 'இந்த படத்துல அப்படி', 'ஓ அந்த படம் மாதிரியா', 'அந்த சீன் மறக்கவே முடியல', 'அந்த சீன் பாத்தாலே எங்க அப்பா ஞாபகம் வருது', 'என் கதைய எடுத்த மாதிரியே இருந்தது', 'அந்தப் படத்துல நடந்த மாதிரி நமக்கு நடந்தா சூப்பரா இருக்கும்ல!'... இப்படியெல்லாம் பேசாத மனிதர்கள் மிக மிகக் குறைவு.

எத்தனையோ கண்டுபிடிப்புகள் நிகழ்த்திய விஞ்ஞானிகளை, தொழில்நுட்பநிபுணர்களைவிட மக்கள் கலைஞர்களை கொண்டாடித் தீர்ப்பதற்கு காரணம், கலைஞர்கள் தங்கள் உணர்ச்சிகளை மீட்டுகிறார்கள் என்பதால், தங்கள் வாழக்கை அனுபவத்தை அதிகமாக்குகிறார்கள் என்பதால், மனதுக்கு ஆகாரம் அளிக்கிறார்கள் என்பதால், ஏனெனில் மனிதர்கள் உணர்ச்சிகரமானவர்கள்.

வாழ்க்கையின் முழுமை அதன் அனுபவங்களில் இருக்கிறதென்றால், சினிமா நம் ஆயுளை நான்கு மடங்கு ஆக்குகிறது. கலையைக் கொண்டாடாத சமூகம் பண்பாட்டில் பின்தங்கிப் போகும். தனது சமநிலையில் பிறழ்ந்து போகும். அதன் தனி மனிதர்கள் பலர் தங்கள் அக அழகைத் தொலைத்து நிற்பார்கள்.

கலை, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அள்ளி அள்ளி பருக வேண்டிய அமிர்தம்!

(நன்றி: தி இந்து தமிழ்திசை)

# தங்க முதுகு தவளை இந்தியாவில் கண்டுபிடிப்பு

## இலங்கைக்கே உரித்தானதாம்



இலங்கைக்கேஉரித்தானதுஎன கூறப்படும்தங்கம்போலமின்னும் அபூர்வ தவளை இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது ஆந்திர மாநிலம், பலம துறையைச்சேர்ந்ததீபாஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற தவளைகள் இலங்கையில் மட்டுமே காணப் படுகின்றன. இந்த தவளையின்




னேறு அருகே உள்ள கவுண் டன்யா வனப்பகுதியை ஒட்டி கவுனிதிம்மேபள்ளி என்ற கிராமத் தினுள் குளத்தில் கண்டுப்பிடிக்க ப்பட்டுள்ளதாக இந்திய விலங்கியல் முதுகுதங்கநிறத்திலும்உடல்மேல் பகுதி கருமையாகவும் உள்ளது. இதனுடைய அறிவியல் பெயர் ஹைறா கிராசிலிஸ் என்பதாகும். (05)

# தலவாக்கலை நீர்த்தேக்கத்தில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் மிதந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் ஒன்றை தலவாக்கலை பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை மாலை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 18 வயதுடைய பெண் எனவும் இவர் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாமஸ்டன் ரத்தினகிரியை சேர்ந்த பெரியசாமி திலிஷினா என அடையாளம் காணப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரத்தில்சடலம்தொடர்பில்நுவரெலியாமாவட்ட நீதிமன்றத்தின்கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு நீதவான் வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்டு பின் பிரேத பரிசோதனைக்காகச் சடலம் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் எனத் தெரிவித்தனர்.

மேலும்உயிரிழந்தபெண்தொடர்பில்விசாரணைகள் செய்து வருவதாகவும், இச் சம்பவத்தில் உயிரிழந்த பெண் தன்னுயிரை மாய்த்துக் கொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்ற கோணத்தில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# இரத்தினபுரியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஆண் ஒருவர் சாவு

இரத்தினபுரி பொலிஸ் பிரிவிற்குற்பட்ட தொடம்பே பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் என இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி, தொடம்பே பகுதியைச் சேர்ந்த 32 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவருக்கும் அவரது உறவினரொருவருக் கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் சந்தேக நபரான உறவினரால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரது சடலம் இரத்தினபுரி வைத்தி யசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஹொரணை துப்பாக்கிச் சூட்டின் சூத்திரதாரி களுத்துறையில் கைது

ஹொரணை, கிரேஸ்லேன்வத்தை பிரதேசத்தில் கடந்த 5 ஆம் திகதி வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி களுத்துறை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுத்துறைகுற்றப்புலனாய்வுபிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


கொட்டாவ பிரதேசத்தில் உள்ள வாடகை வீடொன்றில் தற்காலிகமாகத் தங்கியிருந்த 31 வயதுடைய இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தற்காலிகமாகத் தங்கியிருந்த வாடகை வீட்டிலிருந்து மற்றுமொரு பிரதேசத்திற்குச் செல்ல முற்படும் போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை களுத்துறை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# அசிட் தாக்குதலுக்கு இலக்காகி பெண் சாவு

## அம்பலாங்கொடையில் சம்பவம்

அம்பலாங்கொடைபிரதேசத்தில் அசிட் தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அம்பலங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (திங்கட்கிழமை)இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேமலதாஎன்ற59வயதுடைய மூன்றுபிள்ளைகளின்தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது வீட்டின் சமையல் அறையில் உணவு தயாரித்துக் கொண்டிருக்கும் போது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த நபரொருவர் இவர் மீது அசிட் வீசியுள்ளார் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

காயமடைந்தவர்அயல்வீட்டாளர்களின் உதவியுடன் பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வெசாக் தினத்தை முன்னிட்டு மதுபானசாலைகளுக்கு பூட்டு

வெசாக் மற்றும் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மதுபானசாலைகளை மூடுவதற்கு இலங்கை கலால் திணைக்களம் தீர்மானித்துள்ளது .

இதன்படி, வெசாக் மற்றும் பௌர்ணமி தினமான 23 முதல்24வரையானதிகதிகளில்இந்தமதுபானசாலைகள் மூடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது .

இதேவேளை , எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மாத்தளை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச அனுமதிப் பத்திரம் பெற்ற மதுபானசாலைகளை மூடுவதற்கு இலங்கை கலால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

(05)

# மழை, வரட்சியால் 10,299 பேர் பாதிப்பு

## இருவர் காயம்





நாட்டில் கடும் மழையால் 3,518 குடும்பங்களைச் சேர்ந்த 10,299 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் துசித வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளவை வருமாறு -

அநுராதபுரம் மாவட்டத்தின் கிழக்கு நுவரகம் பலாத்த பகுதியில் பெய்த கடும் மழையால் மரங்கள் முறிந்து வீழ்ந்தமையால் குறித்த இருவரும் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில்நிவிதிகல, கொடகவெல மற்றும் பலாங்கொட ஆகிய பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்தமையாலும், பலத்த காற்று வீசியமையாலும்மூன்றுவீடுகள்பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் 8,000பேரும்,திருகோணமலையில் 1,334 பேரும், கிளிநொச்சியில் 946 பேரும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

(05)

# ஒரு மீன் ஒரு கோடி ரூபா காரைதீவில் அதிசயம்









(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவில் கோடி ரூபா பெறுமதியானது நீல கிளவல்லா (தூணா...) இன மீன் நேற்று (திங்கட்கிழமை) பிடிபட்டுள்ளது.

காரைதீவு பகுதியில் இருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் தூண்டிலில் சுமார் கோடிக்கணக்கான பெறுமதியானது என நம்பப்படும் 49 கிலோ எடையுள்ள நீல தூணா அல்லது உள்ளூரில் நீல ஹெலவள்ளா(ஹென்டா) என அழைக்கப்படும் பெரும் மீன் சிக்கியுள்ளது.

பெரிய கண் மற்றும் நீல நிற வர்ணங்களை கொண்டுள்ள குறித்த மீன் அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் மீனவரின் தூண்டிலில் பிடிக்கப்பட்டுள்ளதுடன் 49 கிலோநிறையுடையகுறித்த மீனை விற்பதற்கான முயற்சியில் மீனவர்கள் இறங்கியுள்ளனர்.

ஒரு கிலோ தூணா மீன் 24 லட்சம் ரூபா கணிப்பிடப்பிடப்படக் கூடியது.

ஒரு துண்டு இவ்வகை மீனை சாப்பிட்டால் பத்து வருடங்கள் மேலதிகமாக வாழக்கூடிய சத்து கிடைக்கும் என நம்பப்படுகிறது.

ஆனால் இங்கு பிடிபட்ட மீன் முறைப்படி இனங்கண்டு முறையாக பேணப்படாமையால்கிலோ3லட்சம்ரூபாபேசப்படுகிறது.

கடும் போராட்டத்திற்கு மத்தியில் பிடிக்கப்பட்ட குறித்த மீன் இனங்கள் 7 வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளதாகவும் யாவும் பெறுமதி மிக்கனவாக உள்ளதாகவும் பெரும் மீன்களை கொள்வனவு செய்கின்ற நிறுவனங்களே இவ்வாறான மீன்களை அதிக விலை கொடுத்து வாங்குகின்றன எனவும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.(05)



# சகோதரியின் பெயரில் டென்மார்க் சென்று பிரஜாவுரிமை பெற்ற பெண் யாழில் கைது

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தனது சகோதரியின் பெயரில் கடவுசீட்டு மற்றும் வங்கி ஆவணங்களை போலியாக பெற்ற குற்றச்சாட்டில் டென்மார்க் பிரஜையை யாழ்ப்பாண பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டு தற்போது டென்மார்க் பிராஜவுரிமை பெற்று டென்மார்க்கில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கடந்த 2015 ஆம் ஆண்டளவில் தனது சகோதரியின் பெயரில் போலியான கடவுசீட்டை பெற்று டென்மார்க் நாட்டிற்கு சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வசித்த அவரது சகோதரி 2019 ஆம் ஆண்டளவில் தனக்கு கடவுச்சீட்டு எடுப்பதற்காக விண்ணப்பித்த போது அவரது பெயரில் ஏற்கனவே கடவுசீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அவருக்கு கடவுசீட்டு வழங்கப்படவில்லை. அதன் போதே தனது சகோதரி தனது பெயரில் கடவுசீட்டு எடுத்து வெளிநாடு சென்ற விடயம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தனது தாயாரின் இறுதி கிரியைக்காக டென்மார்க்கில் இருந்து வந்தவர் , போலியான கடவுசீட்டை பயன்படுத்தி தனது சகோதரியின் பெயரில் யாழ்ப்பாணத்தில் வங்கி கணக்கொன்றையும் ஆரம்பித்துள்ளார்.

இது தொடர்பில் அறிந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரி யாழ்ப்பாண பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , டென்மார்க் பிரஜையான பெண்ணை கைது செய்து, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பிறந்தநாளிலேயே யாழ். யுவதிக்கு எமனாக மாறிய ராணுவ வாகனம்





யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனம் மோதி யுவதியொருவர், நேற்று (திங்கட்கிழமை) உயிரிழந்துள்ளார்.

புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த 23 வயதுடைய சுதாகரன் சாருஜா என்ற யுவதியே உயிரிழந் துள்ளார்

சைக்கிளில் பால் எடுத்து சென்ற வேளை, புத்தூர் - கனகம்புளியடி வீதியில் வீரவாணி சந்திக்கு அருகில் இராணுவ வாகனம் மோதியதில் யுவதி படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த யுவதியை அங்கிருந்தவர்கள் மீட்டு வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற வேளை யுவதி உயிரிழந்துள்ளார்.

யுவதியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த யுவதியின் பிறந்தினம் நேற்றையதினம் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## இந்தோனேசிய....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

விசேட கவனம் செலுத்தப்பட்டது. ஆசியான் அமைப்பின் இந்தோ-பசிபிக் எதிர்கால நோக்கை ஆதரிப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்து சமுத்திர விவகாரங்கள் தொடர்பாக நெருக்கமான இருதரப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பிராந்தியவர்த்தகஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இரு நாட்டு அரசதலைவர்களுக்கும் இடையில் தொடர்ச்சியான சந்திப்புகளை நடத்துவது தொடர்பிலும் இந்தோனேசியாவுடன் நிரந்தர இருதரப்பு உடன்படிக்கையில் ஈடுபடுவது தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன் போது யோசனையொன்றை முன்வைத்தார்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இலங்கையின் வகிபாகத்தை வலியுறுத்தி, உலகளாவிய கலப்பு நிதிக் கூட்டணிக்கு இணை அனுசரணை வழங்கியமை தொடர்பில் ஜனாதிபதி ஜோகோ விடோடோ, இலங்கைக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த முன்னெடுப்புக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், இரு நாடுகளினதும் தொடர்புடைய அமைச்சுக்களுக்கு இடையில் தொடர்ச்சியான ஒத்துழைப்பைப் பேணுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இந்தோனேசிய ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

தனது பதவிக்காலம் எதிர்வரும் காலங்களில் முடிவடையும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ஜோகோ விடோடோ, புதிய இந்தோனேசிய நிர்வாகம் இலங்கையுடனான தற்போதைய உறவுகளை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் புதிய தலைமைத்துவத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கைக்கான விஜயத்தில் இணைந்து கொள்ளுமாறு இந்தோனேசிய ஜனாதிபதி விடோடோவுக்கு பிரத்தியேகமாக அழைப்பு விடுத்தார்.

## காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோசனையையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

'பொது செழுமைக்கான நீர்' என்ற தொனிப்பொருளின் கீழ் உலக நீர் உச்சி மாநாடு மே 18 ஆம் திகதி இந்தோனேசியாவின் பாலியில் ஆரம்பமானது. உலக நாடுகளின் தலைவர்கள், நிபுணர்கள், கல்வியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

1997 முதல், மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் உலக நீர் உச்சி மாநாடு உலகின் அனைத்து நாடுகளுக்கும் நீர் முகாமைத்துவம் தொடர்பான அனுபவங்களையும் அறிவையும் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது. மேலும் தண்ணீர், சுகாதார சவால்கள், நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலும் கலந்தலோசிக்கப்படும்.

ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசிபிக் சமூக, பொருளாதார ஆணைக்குழு, உணவு மற்றும் விவசாய அமைப்பு, சுற்றுச்சூழல் திட்டம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம், கல்வி திட்டம், அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்புகள், சர்வதேச குழந்தைகள் நிதியம், தொழில்துறை மேம்பாடு அமைப்பு, காலநிலை மாற்றத்துக்கான அமைப்பு ஆகியன இணைந்து உலக நீதி உச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தன.

10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வு இன்று (20) காலை இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ (Joko Widodo) தலைமையில் நடைபெற்றது. இதில் உலக நாடுகள் பலவற்றின் தலைவர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் சிறப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட அரச தலைவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளை இந்தோனேசிய ஜனாதிபதி சிநேகபூர்வமாக வரவேற்றார். இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆற்றிய முழு உரை வருமாறு:

'பத்தாவது உலக நீர் உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்தமைக்காக இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவுக்கு எனது நன்றிகள்.

'கூட்டு செழுமைக்கான நீர்' என்ற தொனிப்பொருள் அனைத்து உயிரினங்களினதும் உயிர்நாடியான நீர் வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை முகாமைத்துவம் செய்வதற்கான கூட்டுப் பொறுப்பை வலியுறுத்துகிறது.

மேலும், இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மாநாட்டின் (UNEA-5) ஐந்தாவது அமர்வில் இந்தோனேசியாவால் முன்மொழியப்பட்ட 'நிலையான ஏரி முகாமைத்துவம்' யோசனைக்கு அமைவானதாக காணப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் பேரவையின் (UNEA-6) ஆறாவது அமர்வில், ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையுடன் இணைந்து, '6ஃ13 காலநிலை மாற்றம், உயிர் பல்வகைத்தன்மை குறைவடைதல், சுற்றுச்சூழல் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய நிலையான அபிவிருத்திக்கான நீர்க் கொள்கைகளைப் பலப்படுத்த தேவையான முழுமையான தீர்வுகள்' என்ற திட்டத்தை சமர்ப்பித்தது.

ஜி20 பிரசிடென்சியின் கீழ் உலக கூட்டு நிதியத்தை ஸ்தாபிக்க முன்வந்துள்ளமைக்காக இந்தோனேசிய அரசாங்கத்துக்கு வாழ்த்து தெரிவிக்கிறேன். அதன் முன்னோடி உறுப்பினராக இணைய இலங்கையின் விருப்பத்தையும் தெரிவிக்கிறேன்.

காலநிலை மாற்றமும், தண்ணீர் பிரச்னையும் ஒரே நாணயத்தின் இருபக்கங்களாகும். தற்போதைய நீர்வள நெருக்கடிக்கு காலநிலை மாற்றத்தின் விளைவுகளே முக்கிய காரணம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

காலநிலை மாற்றத்திற்கான நாடுகளுக்கு இடையிலான குழுவான IPCC இன் 2090 வரையான காலநிலை குறித்த கணிப்பின் படி இலங்கையின் உலர் வலயம் தொடர்ந்து வறண்டு போகும் அதேநேரம், ஈர மண்டலம் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஈரமாக மாறும். அத்துடன் கடல் மட்டம் உயர்வதால் உப்புநீர் கரையோரப் பகுதிகளுக்குள் ஊடுருவி, நிலத்தில் உப்பு கலக்கும்.

இலங்கையை உதாரணம் காட்டி இந்த விடயத்தை நான் சொல்லியிருந்தாலும் முழு உலகிலும் இதுதான் நடக்கிறது.

உலகளாவிய ரீதியில், நீர் நெருக்கடிக்கான தீர்வு மற்றும் காலநிலைமாற்றத்தைத்தணித்தல் உள்ளிட்ட விடயங்கள் அவற்றின் மாற்றத்தின் மீதே தங்கியுள்ளன. நீரை இலக்காகக் கொண்ட குறிப்பிட்ட நடவடிக்கைகளுடன் உலகளாவிய முக்கிய மூன்று பிரச்சினைகளுக்கு எதிராகவும் போராட வேண்டியது அவசியமாகும்.

காலநிலை மாற்றத்தால் நீர் மூலங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கு பாரிய நிதி வசதிகள் தேவைப்படுகின்றன. காலநிலை மாற்றத்திற்கான நிதியளிப்புத் திட்டங்களுக்கு ஏற்ப உலகளாவிய வட துருவ நாடுகள் துரதிருஷ்டவசமாக தோல்வியடைந்துள்ளன. கிளாஸ்கோவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடு முடிவடைந்த பின்னர், இதற்கான அரசியல் ரீதியான விருப்பத்தில் குறிப்பிடத்தக்க வரையறைகளை அவதானிக்க முடிகிறது.

காலநிலை அனர்த்தங்களை பொருட்படுத்ததாதநிலைமேற்குலக நாடுகள் மத்தியில் அதிகரித்து வருகிறது. புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தத்திற்கான மாநாடு இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அதன் இறுதி முடிவு நவம்பர் மாதம் நடைபெறும் அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகளை

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# கொழும்பு துறைமுக நகரில் தீ விபத்து

கொழும்பு துறைமுக நகரில் தீ விபத்து தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக வளாகத்தை அண்மித்த அதிவேக நெடுஞ்சாலையில் பணிபுரியும் ஊழியர்களின் வீடொன்றிலேயே இந்தத் தீ பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு 4 தீயணைப் பு வாகனங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனக் கொழும்பு தீயணைப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தநிலையில், தற்போது தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், விசாரணைகள் நடத்துப்பட்டு வருகின்றன. (05)

# கும்புக்கன் ஓயாவில் காயங்களுடன் பெண்ணின் சடலம் ஞாயிறன்று மீட்பு

லுணுகலை, கும்புக்கன் ஓயாவில் பெண் ஒருவரின் சடலம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர். லுணுகலை, துபஹிடியவத்தபிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் ஞாயிறு பிற்பகல் லுணுகலை, கும்புக்கன் ஓயாவிற்கு நீராடச் சென்றுள்ள நிலையில் இவரது 17 வயது மகளும் 12 வயது மகனும் வீட்டிலிருந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் நபரொருவரால் தாக்கப் பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் லுணுகலை, கும்புக்கன் ஓயாவிற்கு அருகில் வைத்து இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது முகம் மற்றும் தலையில் பலத்த காயங்கள் காணப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரும் அவரது கணவரும் நீண்ட காலமாக முரண்பாட்டில் ஈடுபட்டிருந்துள்ளதுடன் உயிரிழந்த பெண் இது தொடர்பில் பலமுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான கணவர் பிரதேசத்தை விட்டுத்தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பதுளை போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

## காலநிலை....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

பொறுத்தே அமையும்.

2021 ஆம் ஆண்டில், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு நீர் தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகளுக்கான உலகளாவிய முதலீடு 2030 ஆம் ஆண்டு 6.7 டிரில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2058 ஆம் ஆண்டில் 22 டிரில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம்(UNEP) 2023'குறைந்தநிதி - குறைந்ததயார்' அறிக்கையின்படி, காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான குறைந்தபட்ச நிதி இடைவெளி ஆண்டுக்கு 194 முதல் 366 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய வட துருவ நாடுகள், உக்ரேனில் இறப்பு மற்றும் அழிவுக்கு நிதியளிக்க தயாராக இருக்கின்றன. ஆனால் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் மரணம் மற்றும் அழிவுகளுக்கு நிதியளிப்பதில் தயக்கம் காட்டுகின்றன.

எதிர்பார்த்த அளவு மற்றும் எதிர்பார்த்த வேகத்தில் எங்களிடம் நிதிகள் வரவில்லை. இதனால் வள இடைவெளியை சமாளிக்கும் வகையில், கோப் 28 மாநாட்டில் இலங்கை வெப்ப மண்டலப் பகுதி முன்முயற்சியை முன்வைத்தது.

இது உலகின் மூன்று மிக முக்கிய பிரச்சினைகளுக்கு ஈடுகொடுப்பதற்கு வெப்ப வலய இயற்கைக் காடுகள், சதுப்பு நிலங்கள், புல்வெளிகள், நீர் மூலங்கள் மற்றும் ஏனைய இயற்கை வளங்களுக்கான வர்த்தக முதலீடுகளை பயன்படுத்திக்கொள்ள புதிய வாய்ப்பாக அமையும்.

இந்த பகுதி முழு உலகத்திற்கும் பாதுகாப்பு கவசமாக இருந்தது. தற்போதைய உலகின் மூன்று மிக முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான உந்து சக்தியாகவும் இருக்கும். வெப்ப வலயத்தில் முதலீடு செய்வது உலகின் முக்கிய 3 பிரச்சினைகளுக்கு எதிராக போராடுவதற்கு வலுசேர்ப்பதாகவும் கருதுகிறேன்.

இந்த சூழலில், உலகளாவிய கலப்பு நிதியியல் தொடர்பான திட்டம் மூலம் உலகின் தென் துருவ நாடுகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் உருவாக்க உதவுகிறது. இந்த நிதியத்தை ஆரம்பிக்கவிருக்கும் 9.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சலுகை நிதியியலுக்கு சிறந்த உதாரணமாக உள்ளது. வெப்ப மண்டல முன்முயற்சிக்கும் இந்த வசதிகள் பயனளிக்கும்.

உலக வரி ஏய்ப்புச் சொத்துக்களின் வருடாந்த இலாபத்திற்கு 10சதவீத வரி விதிக்க இலங்கை முன்மொழிகிறது. அந்த ஆண்டு இலாபம் 1.4 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரியை அமுல்படுத்த தவறிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு ரஷ்ய வங்கிகள் மீது விதிக்கப்பட்டதைப் போன்ற பொருளாதாரத் தடைகளை விதிப்பதன் ஊடாக இந்த வரியை விதிக்கலாம்.

காலநிலை மாற்றம் மற்றும் அதன் தணிப்புக்கான கலப்பு நிதி திட்டங்களுக்கு நிதியளிக்க இந்த வரிகள் பயன்படுத்தப்பட வேண்டும். உலகளாவிய கலப்பு நிதியியல் முன்முயற்சி, சேதம் மற்றும் இழப்பு நிதிக்கு ஒரு துணையே அன்றி மாற்றீடு அல்ல. இந்த இரண்டு நடவடிக்கைகளையும் ஒன்றாகச் செயல்படுத்த வேண்டும்.

எனவே, கூட்டமைப்பு செயலகத்தை அமைப்பதிலும், ஜி20 உச்சிமாநாட்டில் இந்த திட்டத்தை முன்வைப்பதிலும் இந்தோனேசியா மேற்கொண்ட கடின முயற்சிக்கு இந்த மாநாட்டில் எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். நீர்வள முகாமைத்துவம் மற்றும் உலகளாவிய கலப்பு கூட்டமைப்பை ஒன்றிணைக்கும் வகையில் ஜனாதிபதி ஜோகோ விடோடோ வழங்கிய பங்களிப்புக்கு மீண்டும் நன்றியைத் தெரிவிக்கிறோம் என்றார்.

## ஜூலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதியிடம் முன்வைத்தோம் இருப்பினும் ஜனாதிபதி சாதகமான பதிலை இதுவரை தரவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் அரசியலில் வீரவசனம் பேசும் தரப்பினரது உண்மை முகம் வெளியாகும். பொதுத்தேர்தல் இடம்பெற்றால் சிறந்த அரசியல் சூழல் ஏற்படும். இதன் காரணமாகவே பொதுத்தேர்தலை கோருகிறோம்.

எதிர்வரும் ஜூலை மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று முன்னாள் ரஷ்ய தூதுவர் குறிப்பிட்டுள்ளது அவரது தனிப்பட்ட கருத்தே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல, ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் பற்றி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாட்டு மக்களுக்கு அறிவிப்பார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவின் இடைக்கால பதவிக்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை தெரிவு செய்தோம். 2022 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். அடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தவில்லை, எவ்வித இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை என்றார்.

## கிளிநொச்சியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்கின்றார்கள்.

கிளிநொச்சி மண் தற்போது ஆக்கிரமிக்கப்படுகின்றது. இங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் அரசுக்கு விலைபோய்விட்டார்கள். இந்த ஆக்கிரமிப்பை பார்த்துக்கொண்டு இருக்கப்போவதில்லை. நாம் போராடுவேம். இன்னும் ஆயிரக்கணக்கானவர்களை மையப்படுத்தி போராடுவோம் என்றார்.

## 15 வருடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைச்சமூகத்தை உடைத்து துருவப்படுத்திய போர் முடிவடைந்து 15 வருடங்களின் பின்னர் இலங்கை எதிர்கொள்ளும் பல சவால்கள் பற்றிய நுண்ணறிவை இந்தப் பயணம் எனக்கு வழங்கியுள்ளது. எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும், அவர்களின் வலி மற்றும் துக்கங்களை விவரித்து, தங்களின் கருத்துகளையும் கவலைகளையும் பகிர்ந்துகொண்டு, நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திற்கான அவர்களின் நம்பிக்கைகள், அச்சங்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு குரல் கொடுத்த அனைவருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது அமைப்பானது நீண்டகால தண்டனையிலிருந்து விடுபடுவதை எதிர்கொள்வதற்கும், கடந்த கால மற்றும் நிகழ்காலத்தின் மீறல்கள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும், பாகுபாடு மற்றும் அடிப்படை சுதந்திரங்களின் அடக்குமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கும் எடுக்கப்படும் அனைத்து உண்மையான முயற்சிகளையும் அர்ப்பணிப்புகளையும் ஆதரிக்கத் தயாராக உள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் மனித உரிமைகள் சவால்கள் குறித்து ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபடுவதற்கு நேரத்தை ஒதுக்கியதற்கும் சந்தர்ப்பம் வழங்கியதற்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது தெற்காசிய பிராந்திய அலுவலகத்தின் இல்லமாக, இலங்கை எமது பணிகளுக்கு இன்றியமையாதது மற்றும் எமது நோக்கத்திற்கான ஆளும் தரப்பின் தொடர்ச்சியான ஆதரவையும் அர்ப்பணிப்பையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்ட சிவில் சமூக அமைப்புச் சட்டம் போன்ற பல புதிய சட்டங்கள் தற்போது இலங்கையின் துடிப்பான சிவில் சமூகம் எதிர்கொள்ளும் ஆபத்துக்களுக்கு கவலையளிக்கும் சான்றுகளாக உள்ளன.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான கூட்டம், ஐசிசிபிஆர் சட்ட விதிகளைப் பயன்படுத்துதல், தன்னிச்சையான கைதுகளைச் செய்தல் உட்பட முறையான குற்றச்சாட்டுகள் அல்லது ஆதாரங்கள் இல்லாமல் பல குற்றச்சாட்டுகளின் கீழ் கைதுகளைச் செய்தல், உயிர்களை அச்சத்துடன் வாழ வழிவகுத்தல் குறித்து நாங்கள் மேலும் கவலைப்படுகிறோம். இதற்கு முடிவுகட்டவேண்டும்.

பல்லாயிரக்கணக்கான மக்களைக்காயப்படுத்திய, இறக்கவைத்த, இடம்பெயர வைத்த, அல்லது பலவந்தமாக காணாமல்போகச் செய்த மூன்று தசாப்த கால உள்நாட்டு ஆயுதப் போர் முடிவடைந்து 15 வருடங்களைக் குறிக்கும் இலங்கைக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். அப்படியிருந்தும் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களும்ம் மக்களும் தோல்வியுற்றுவிட்டனர். அடுத்தடுத்து வந்த ஆளும் தரப்புகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளும் எதிர்கட்சித் தலைவர்கள், மத ஸ்தாபனங்கள் மற்றும் தேசிய ஊடகங்கள் வரை தலைமைப் பதவிகளில் இருப்பவர்கள் தண்டனையின்மைக்கு எதிரான போராட்டத்தை நிலைநிறுத்தத் தவறிவிட்டனர்.

இனிவரும் மாதங்களில் நடைபெறவுள்ள தேர்தல்கள் இலங்கையின் எதிர்காலம் மற்றும் மனித உரிமைகள் நிலைப்பாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். நாட்டின் அரசியல் தலைமையானது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும், அது பிளவுகளை நிவர்த்தி செய்யும், இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றும் அர்த்தமுள்ள சிகிச்சைக்கான வழிகளை வழங்கும். கடந்த காலத் தவறுகளை நிவர்த்தி செய்வது அவசியம்; ஒரு புதிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதை ஆளும்தரப்பு பரிசீலிக்கும் வேளையில், நிவர்த்திக்கான சூழலை உருவாக்க நனவான முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

வெளித்தோற்றத்தில் அரசியல் விருப்பமின்மை, நீதி வழங்குவதில் மனநிறைவு என்பன நல்லிணக்கத்தைத் தடுக்கிறது, குறைகளை ஊட்டுகிறது மற்றும் உறுதியற்ற தன்மையை ஊக்குவிக்கிறது. மெத்தனப் போக்கிற்கு இடமளிக்கக் கூடாது.

போர் மற்றும் நடந்து கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்காவும் உண்மை மற்றும் நீதியைப் பாதுகாப்பதற்கும், சுதந்திரமான மற்றும் நியாயமான இலங்கைக்கான அடித்தளத்தை அமைப்பதற்கும் தேசிய அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றுமாறு சர்வதேச சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த வருடம் இலங்கையில் பாராளுமன்ற ஜனாதிபதி தேர்தல்கள் இடம்பெறவுள்ளதால் இந்த வருடம் இலங்கையின் தலைவிதியையும் மனித உரிமை பாதுகாப்பின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும்.

நான் ஏன் இலங்கைக்கு வந்தேன்? இலங்கையின் உள்நாட்டு போர் முடிவடைந்து 15 வருடங்களாகின்ற நிலையில் இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்து அறிந்துகொள்வதற்காக இந்தப் பயணத்தை நான் மேற்கொண்டேன்.

இலங்கையில் நீதியை நிலைநாட்டுவதற்காக நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அறிவதற்காகவும் போரினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆதரவை வழங்கவும் நான் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்.

நான் முள்ளிவாய்க்கால் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வடக்கிற்குச் சென்றேன். காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சந்தித்தேன். அவர்கள் வெளிப்படுத்துகின்ற துணிச்சலும் மீள்எழுச்சி தன்மையும் நீதியை காண்பதற்கான அவர்களது உறுதிப்பாடும் எனது மனதை தொட்டுள்ளது. இலங்கையில் மிகப்பெருமளவானவர்கள் காணாமல்போயுள்ளனர் அவர்களிற்கு என்ன நடந்தது? காணாமல்போதல் என்பது மிகமோசமான வன்முறை. அது முடிவிற்கு வராது. உங்களிற்கு தெரியாது பாதிக்கப்பட்டவர்களிற்கு பலபல வருடங்களிற்கு இந்த வலி தொடரும். இறப்பைவிட இது வலிமிகுந்தது. வலியும் வேதனையும் மிக மோசமானதாக காணப்படும். உளவியல் சித்திரவதை.

நாளாந்தம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும் தசாப்தங்களாக இந்த வலியும் வேதனையும் தொடரும். இது இலங்கையின் மீது விழுந்த கறை இந்த கறையை அகற்ற ஒவ்வொரு இலங்கையரும் முன்வரவேண்டும். அந்த குழந்தைகள் எங்கே நான்கைந்து மாத குழந்தைகள் மூன்று நான்கு வயதானவர்கள்? நான் அவர்களின் படங்களை பார்த்திருக்கின்றேன். 15 வருடங்களாகியும் பதில் இல்லை. இது மிக நீண்டகாலம். இது மன்னிக்க முடியாத குற்றம்-. இவர்கள் குறித்து ஆளும்தரப்பு பதிலளிக்கவேண்டும்.

இவர்கள் தாங்களாக முன்வந்து சரணடைந்தவர்கள். சரணடைவதற்கான பகுதிக்கு தாங்களாகச் சென்று சரணடைந்தார்கள். எங்கே அந்த குழந்தைகள்?. அவர்கள் குழந்தைகள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கு 15ஆண்டுகள் தேவையாக உள்ளதா? என்றார்.

## பொருளாதாரம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக முன்வைக்கப்படும் 'பொருளாதார பரிமாற்றம் சட்டமூலம்' ஆகும்.

இந்த சட்டமூலம் சர்வதேச நாணய நிதியத்தால் முன்மொழியப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்தின்படியே இந்த சட்டமூலம் முன்வைக்கப்படுகின்றது என்பதைக் கூற வேண்டும். கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் தற்போது ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிலை எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

மேலும், மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையில், நாட்டின் அரச நிதி முகாமைத்துவம் மிகவும் உகந்த நிலையில் பேணப்பட வேண்டும்.

இது தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பில் கவனம் செலுத்தி, அரச நிதியை முறையான முகாமைத்துவம் செய்வதற்காக 'அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம்' எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான கூட்டு வேலைத்திட்டத்தில் இது தொடர்பில் எமக்கு சுட்டிக்காட்டப்பட்டது. நாட்டின் எதிர்கால நிதி நிர்வாகத்தில் இது மிகவும் முக்கியமான சட்ட மூலம் என்பதையும் கூற வேண்டும்.

இந்த இரண்டு சட்டமூலங்களும் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானவை என்பதையும் குறிப்பிட வேண்டும். இந்த இரண்டு சட்டமூலங்களிலும் பல தொழில்நுட்ப விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பொருளாதார போக்கை மாற்றாமல் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை மேலும் உறுதிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார பரிமாற்றம் குறித்த சட்ட மூலம் பற்றி மேலும் விளக்கினால், நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது மிகவும் முக்கியமானது. 2023 இன் இரண்டாவது மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் பொருளாதாரச் சுருக்கம் ஏற்பட்டது. ஆனால் நான்காவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.5சதவீதமாக எட்டப்பட்டது. அதனுடன், பொருளாதார நன்மை இந்த நாட்டில் மிகக் குறைந்த மட்டத்திற்கும் கிடைக்கத் தொடங்கியது.

மேலும், இந்த நாட்டின் பொருளாதார போட்டித்தன்மையை மேம்படுத்துவதுடன், உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் பொருளாதாரத்தை மாற்றியமைப்பது, உலகளாவிய ஒத்துழைப்பை நன்கு பேணுவது மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவது அவசியம். அது மாத்திரமன்றி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களில் மாறுதல் போன்ற விடயங்களும் இந்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, சர்வதேச வர்த்தகம், வர்த்தக ஒப்பந்தங்கள், காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்களில் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டிய சட்டக் கட்டமைப்பு இந்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் புதிய பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவது, போட்டித்தன்மையில் முதலீடுகளை ஈர்ப்பது, முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவது, சர்வதேச வர்த்தகத்தை விரிவுபடுத்துவது, தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழுவை நிறுவுவது மற்றும் ஏற்றுமதி தொடர்பான நிறுவனங்களை ஸ்தாபிப்பது குறித்து இந்த சட்டமூலம் ஊடாக கவனம் செலுத்தப்படும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

குறிப்பாக பொருளாதார பரிமாற்றம் தொடர்பாக நாம் எடுத்த தீர்மானங்களுக்கு பாராளுமன்றம் அண்மையில் அங்கீகாரம் அளித்தது. 2022 இல், அரச கடன் விகிதம் 128 சதவீதமாக இருந்தது. 2032 ஆம் ஆண்டாகும்போது அது 95சதவீதத்துக்கும் குறைவாக பேணப்பட வேண்டும்.

மேலும், மொத்தத் தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 34.6சதவீதமாக இருந்த அரச நிதித் தேவையை 2032 ஆம் ஆண்டளவில் 13சதவீதத்துக்கும் குறைவாக பேண வேண்டியது அவசியமாகும்.

கடன் சேவையும் மிக முக்கியமானது. கடனைச் செலுத்தக்கூடிய கடன் நிலைபேறான நாடாக இலங்கையை மாற்ற முயற்சிக்கின்றோம். 2022 இல் 9.4சதவீதமாக இருந்த கடன் செலுத்தும் விகிதத்தை 2027 ஆம் ஆண்டாகும்போது 4.5சதவீதத்தினை விடவும் குறைக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறான நாட்டிற்காக அடைய வேண்டிய குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் நாட்டின் பொருளாதாரம் எதிர்கொள்ளக்கூடிய எந்தவொரு சவால்களுக்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டிய சட்டமூலமாக இதனை அறிமுகப்படுத்தலாம்.

இந்தச் சட்டமூலங்கள் மூலம் இறுதியில், நிலைபேறான பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கும், கடன் கொடுப்பனவுகளை நிலைபேறான மட்டத்தில் பேணுவதற்கும், விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை முகாமைத்துவம் செய்வதற்கும், கொடுப்பனவு சமநிலையை நிர்வகிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத் திசை சரியாக வழிநடத்தப்படுவதை நாம் எதிர்பார்க்கிறோம் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மேலும், அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் ஊடாக பாரிய கருத்தாடல் எழுந்துள்ளது. தற்போதுள்ள சட்டத்தின் பலவீனங்களைக் கண்டறிந்து, எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருத்தமான சட்டக் கட்டமைப்பை முன்வைப்பது இதன் மூலம் இடம்பெறுகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்' என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பீடி இலைகளுடன் லொறியை கடத்திச் சென்ற சார்ஜன்ட், கான்ஸ்டபிள் உட்பட மூவர் கைது

பீடி இலைகளுடன் லொறியை கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என புத்தளம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் பகுதியில் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஆனமடுவ மற்றும் வெலசிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பீடி இலைகளின் பெறுமதி இரண்டு கோடி ரூபா எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மற்றுமொரு பொலிஸ் அதிகாரியை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வானில் வந்த சந்தேக நபர்கள் பீடி இலைகள் கொண்டுவரப்பட்ட லொறியின் சாரதியைக் கடத்திச் சென்று தாக்கி பணம் மற்றும் கைத்தொலைபேசிகளை கொள்ளையடித்துவிட்டு பீடி இலைகளுடன் லொறியை கடத்திச் சென்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.(05)

# சட்டவிரோத மதுபானத்துடன் சப் - இன்ஸ்பெக்டர் கைது

சட்டவிரோத மதுபானம் மற்றும் மதுபானம் தயாரிக்கும் உபகரணங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என திறப்பனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர் கவரக்குளம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் சப்-இன்ஸ்பெக்டர் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

அநுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குகிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தங்கியிருந்த வீட்டில், சட்டவிரோதமாகக் காய்ச்சப்பட்ட மதுபானம், எரிவாயு அடுப்பு, பீப் பாய், அதைக் காய்ச்ச பயன்படுத்திய செப்புச் சுருள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

(05)

# அனுமதிப் பத்திரத்திற்கு முரணாக மணல் ஏற்றிய 4 டிப்பர்கள் மாட்டின

## அதன் சாரதிகளும் கைது



தருமபுர போலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் வேறு பகுதியில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு சந்தேக நபர்களும் டிப்பர் வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் பொலீஸ் விசாரணைகளின் பின்னர் பொலீஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் தடையப்பொருள்கள் நீதிமன்றில் முற்படுத்தார் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தர்மபுர போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (05-113)

# மழையால் வயிற்றுப்போக்கு நோய் அதிகரிக்கும் அபாயம்

## பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

தொடரும் மழையால் வயிற்றுப் போக்கு நோய் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

எனவே, எதிர்வரும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடு பூராகவும் தானம் வழங்கும் நிகழ்வுகளில் சுத்தமான நீரைப் பயன்படுத்துமாறு பொது சுகாதார சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

மழையால் நீர்நிலைகள் மாசுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளதோடு, வெசாக் பண்டிகைக்கு தானம் வழங்கப்படும் விகாரைகள் முதல்நாள் வரை பதிவுசெய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஏனைய வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் தானம் வழங்குவதில் குறைபாடு காணப்படுவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (05)

# அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கு ஹரீஸ் எம்.பியால் நிதி ஒதுக்கீடு



(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் உள்ள பொது நிறுவனங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் பாடசாலைகளுக்கு திகாமடுல்ல மாவட்ட நபாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஷின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணம் அட்டாளைச்சேனை தைக்கா நகர் அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகருமான எம்.ஜே.எம். அன்வர் நௌசாத்தின் ஏற்பாட்டில் தைக்கா நகரில் வைத்து கையளிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் அன்வர் நௌசாத் பிரதிநிதித்துவப்படுத்தும் தைக்கா நகர் வட்டாரத்தில் அமைந்துள்ள தைக்கா நகர் ஜும்ஆ பள்ளிவாசல், மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசல், மஸ்ஜிதுல் பத்ர் பள்ளிவாசல், மஸ்ஜிதுல் ஹம்றா



பள்ளிவாசல், கமு/அக்/ ஸாஹிரா வித்தியாலயம், கமு/அக்/ அர்ஹம் வித்தியாலயம், இளவன் ஸ்டார் விளையாட்டு கழகம், சோபர் விளையாட்டு கழகம், சூப்பர் சோனிக் விளையாட்டு கழகம், பைன் ஸ்டார் விளையாட்டு கழகம், அட்டாளைச்சேனை நடுவர் சங்கம், அஸ்ரப் ஞாபகார்த்த சனசமூக நிலையம், சீட் பௌண்டஷன், சம்புநகர் விவசாய அமைப்பு, நுஜா ஊடக அமைப்பு, போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களிடம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வழங்கி வைத்தார்.

இதன்போது ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எஸ்.எல்.ஏ. ரசாக், கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஏ.ஆர். சாதிக், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான ஏ.எஸ்.எம். உவைஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். றியாஸ், மு.கா பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதானிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் முஸ்லிம்களின் அபிலாஷைகள், முஸ்லிம்களின் அரசியல் போக்குகள், அட்டாளைச்சேனை அபிவிருத்தி மற்றும் பிராந்திய மக்களின் தேவைகள், முஸ்லிம்களுக்கு இருக்கும் சவால்கள், தீர்வுகள் பெற எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், பொருளாதார மேம்பாடு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# ஈரான் அதிபரின் மறைவுக்கு ரிஷாத் பதியுதீன் அனுதாபம்



ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைஸி, ஈரானிய வெளிவிவகார அமைச்சர், தப்ரிஸ் மஸ்ஜிதின் இமாம் மற்றும் கிழக்கு அஜர்பைஜான் ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் ஹெலிகொப்டர் விபத்துகுள்ளாகி பலியான துயரச் செய்திக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அவர்களின் அகால மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில் -

இந்த எதிர்பாராத துயரச் சம்பவம் ஈரான் மக்களுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரைஸி, அர்ப்பணிப்புள்ள இரக்கம் கொண்ட தலைவராக இருந்தார். ஈரான் மற்றும் இஸ்லாமிய உலகின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர். ஈரானின் அரசியல், சமூக மற்றும் மத விவகாரங்களில் அவரின் பங்களிப்புகள் தலைமுறை தலைமுறையாக நினைவுகூரப்பட்டு போற்றப்படும்.

மேலும், பாலஸ்தீன மண்ணுக்காகவும் மக்களின் உரிமைக்காகவும் துணிச்சலுடன் செயலாற்றியதில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைஸி பங்களிப்பு அளப்பரியது. சுதந்திர பாலஸ்தீனம் உருவாக வேண்டும் என்பதில், முன்னின்று உழைத்த, துணிச்சல் மிக்க முன்னணி அரசியல் தலைவராக விளங்கியவர்.

அதேபோன்று, இலங்கை ஈரானின் மனிதாபிமான உதவிகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுள்ளது. எங்களுக்குத் தேவைகளும், பொருளாதாரப் பிரச்சினைகளும் ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர். அந்த உதவிகளை நாம் இன்றும் நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறோம். இரு நாடுகளுக்குமிடையிலான உறவு எந்த சந்தர்ப்பத்திலும் வலுப்பெறும் என்பதில் நான் உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருக்கிறேன்.

இந்தத் துக்ககரமான தருணத்தில், எமது பிரார்த்தனைகள் விபத் தில் மரணித்தவர்களுக்கும் உறவுகளுக்கும் மற்றும் ஈரான் மக்களுக்கும் என்றுமே இருக்கும். மரணித்தவர்களுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்மிகு சுவனத்தை வழங்கவும், அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு இந்த பேரிழப்பைத் தாங்கும் வலிமையையும் பொறுமையையும் வழங்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறோம்.

''எந்தவொரு ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீர வேண்டும்' என்ற நியதியின் படி, இந்த இழப்பையும் பொறுத்துக்கொண்டு ஆறுதல் அடைவோம்.' என்று குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சேனையூர் ஸ்ரீநாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல்

(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கில்வரலாற்றுச்சிறப்புமிக்க மூதூர் கிழக்கு - கட்டைபறிச்சான் வடக்கு- சேனையூர் ஸ்ரீநாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி 52 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீவருணகுல விநாயகர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பெட்டி ஊர்வலம் நாகம்மாள் ஆலயத்தைச் சென்றடைந்து பக்தி பூர்வமான கிரியையோடு மடைப்பெட்டி வந்து







ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ . அரசரெத்தினம் அவர்களால் கையேற்கப்பட்டு பொங்கல் பெருவிழா இடம் பெற்றது.

காவடி எடுத்தல் , வேளை நூல் கட்டுதல், பொங்கல் சாடி வைத்தல், பால்பழப்பூசை,சிவலிங்க நாகதம்பிரானுக்கு புனித மஞ்சள் நீர்வார்க்கும்விசேடபூசைநிகழ்வுகள் இடம்பெற்றன.

நிறைவாக விஷேட தீபாரா



தனைகளுடன் பூசை இடம்பெற்று, ஸ்ரீமகாவிஷ்ணு ஆறுமுகவேல் சகிதம் அம்பாள் திருஉலாவந்து அடியார்களுக்கு அருள் காட்சி இடம் பெற்றது.

நிகழ்வில் ஆலயத்தின் பிரதம



குரு சிவஸ்ரீ அ . அரசரெத்தினம் அவர்களுக்கு ஆலய நிர்வாகத்தால் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து வாழ்த்து மடல் வழக்கி கௌவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2024இல் வெளியிடப்பெற்றது